LAW & SOCIETY TRUST

# புதிய சட்டங்கள் மற்றும் நிர்வாக முடிவுகள் குறித்த புதுப்பிப்பு.

## - ஜூலை 2026 -


15 ஆகஸ்ட் 2026

LAW TRACKER

# புதிய சட்டங்கள் மற்றும் நிறைவேற்றுத் தீர்மானங்கள் – ஜூலை 2026

*சுருக்கம் | 15 ஓகஸ்ட் 2026*

**இலங்கையின் சட்டவாக்கச் செயன்முறை**




## I. சான்றளிக்கப்பட்ட சட்டங்கள்

- **2026 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டம்** (2026 ஜூன் 30 ஆம் திகதி சான்றளிக்கப்பட்டது) — குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகளுக்கான தன்னார்வப் பிணக்குத் தீர்த்தல் பொறிமுறை ஒன்றாக மத்தியஸ்தத்திற்கான ஒரு நியதிச்சட்டச் சட்டகத்தைத் தாபிக்கின்றது. கைச்சாத்திடப்பட்ட மத்தியஸ்தம் செய்யப்பட்ட தீர்த்துவைத்தல் ஒப்பந்தங்களை சட்டப் பிணிப்புடையதாக அங்கீகரிக்கின்றது. நிலுவையிலுள்ள வழக்குகளை அவர்களது தற்றுணிபின் பேரில் மத்தியஸ்தத்திற்காக ஆற்றுப்படுத்துவதற்கு நீதிமன்றங்களை அனுமதிக்கின்றது.
- **2026 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்** (2026 ஜூலை 3 ஆம் திகதி சான்றளிக்கப்பட்டது) — 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துகின்றது. சேர்பெறுமதி வரிப் பதிவின் தொடக்கநிலையை வருடத்திற்கு ரூ. 60 மில்லியன் எனத் தக்கவைக்கின்றது. இலங்கை வாடிக்கையாளர்களுக்கான அவர்களது விநியோகம் பன்னிரண்டு மாதங்களில் ரூ. 60 மில்லியனை அல்லது காலாண்டு ஒன்றில் ரூ. 15 மில்லியனை விஞ்சினால், வெளிநாட்டு எண்ணிம சேவை வழங்குநர்கள் சேர்பெறுமதி வரிக்காகப் பதிவு செய்தல் வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது. கண்டிப்பான விலைப்பட்டியல் தேவைப்பாடுகள், திருத்தப்பட்ட உள்ளீட்டு வரிக் கடன் விதிகள், இற்றைப்படுத்தப்பட்ட வரிக் காலப்பகுதி வரைவிலக்கணங்கள், மற்றும் இணங்காமைக்கான திருத்தப்பட்ட தண்டங்கள் ஆகியவற்றை அறிமுகம் செய்கின்றது.
- **2026 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, தேசிய சூழல் (திருத்தச்) சட்டம்** (2026 ஜூலை 21 ஆம் திகதி சான்றளிக்கப்பட்டது) — 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தைத் திருத்துகின்றது. உரிமமளித்தல் மற்றும் இரத்துச் செய்தல் தத்துவங்களுடன் மூலோபாய சூழல் மதிப்பீடுகள், திண்மக்கழிவு முகாமைத்துவம், விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமை, தீங்கு விளைவிக்கும் கழிவுகளுக்கு உரிமமளித்தல், இரசாயன முகாமைத்துவம், மற்றும் தீழ்ப்பாக்கியின் கழிவுநீர்ச்சுமையின் அடிப்படையிலான கழிவுநீர் வெளிவிடுகைக் கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தத்துவங்களை விரிவுபடுத்துகின்றது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத் தவறுகளுக்கான தண்டங்களை ரூ. 15 மில்லியன் வரையான குற்றப்பணங்கள் மற்றும் மூன்று வருடங்கள் வரையான மறியற்றண்டனை வரை அதிகரிக்கின்றது, சில தவறுகளை பிணையளிக்கக்கூடியவையாக ஆக்குகின்றது, சுற்றாடல் மீட்டளிப்பைக் கட்டளையிடுவதற்கு நீதிமன்றங்களுக்கு வலுவூட்டுகின்றது, அத்துடன் நிறுவனங்களின் பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் தனிப்பட்ட பொறுப்பினைக் கொண்டிருத்தலையும் அறிமுகம் செய்கின்றது

## II. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலங்கள்

- **2026 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, இலங்கைக் கல்வாரி தேவஸ்தானம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம்** (9 ஜூலை 2026 சமர்ப்பிக்கப்பட்டது) — தேவஸ்தானத்தை சபை ஒன்றிற்குப் பதிலாக கம்பனி ஒன்றாக மீளக் கட்டமைத்து, 'இலங்கைக் கல்வாரித் தேவாலயம் லிமிடட்' என மீளப் பெயர் குறித்துரைக்கின்றது. இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்படும் ஏதேனும் நிதிகள் அல்லது கொடைகளுக்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்துமூல அனுமதி தேவைப்படுத்தப்படுகின்றது. நிதிப் பதிவுகளைப் பேணல், வருடாந்த சுயாதீனக் கணக்காய்வு, மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடனான வருடாந்த அறிக்கை ஒன்றினை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல் என்பவற்றைக் கட்டாயமாக்குகின்றது.

## III. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலங்கள்

- **2026 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விலங்கின நலம் பேணல் சட்டமூலம்** (2026 ஜூலை 20 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) — விலங்கின நலம் பேணல் மற்றும் விலங்குகளைக் கொடுமைப்படுத்தலைத் தடுத்தல் என்பவற்றை ஏற்பாடு செய்வதுடன் (475 ஆம் அத்தியாயமான) விலங்குகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தையும் நீக்குகின்றது. அடித்தல், அளவுக்கதிகமாக வேலை செய்வித்தல், நஞ்சூட்டல், கைவிடுதல், சட்டமுறையற்ற விதத்தில் கொல்லுதல், பொறிகளைப் பயன்படுத்தல், அத்துடன் வேட்டையாடுதல் மற்றும் சண்டையிடுல் போன்ற தடைசெய்யப்பட்ட நிகழ்வு என்பவை உள்ளடங்கலாக விலங்குகளைக் கொடுமைப்படுத்தலுக்கான தவறுகளைத் தாபிக்கின்றது. விலங்குகளை ஏற்றிச்செல்லல், பரிசோதனைகளை மேற்கொள்ளல், மற்றும் செல்லப்பிராணிகள் கடைகளுக்கான உரிமமளித்தல் என்பவற்றை ஒழுங்குறுத்துகின்றது. விலங்கின நலம் பேணல் ஆலோசனைக் குழு ஒன்றைத் தாபிப்பதுடன் சோதனையிடுதல் மற்றும் அமுலாக்கத் தத்துவங்களுடன் விலங்கின நலம்

பேணல் அலுவலர்களாக அரசாங்க விலங்கு மருத்துவர்களையும் குறித்துரைக்கின்றது. மிகவும் பாரதூரமான குற்றங்களுக்கு ரூ. 500,000 வரையான குற்றப்பணங்கள் அல்லது நான்கு வருடகால மறியற்றண்டனை வழங்கப்பட்டுள்ளது.

- **2026 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புத் (திருத்தச்) சட்டமூலம்** (2026, ஜூலை 27 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) — 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தைத் திருத்துகின்றது. ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியை மாகாணப் பகிரங்க சேவைக்கும் பொலிஸ் அலுவலர்களுக்கும் விரிவாக்கம் செய்கின்றது. மேல் நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றம் ஆகிய இரண்டிலும் குற்றச்சாட்டுகளை அல்லது குற்றப்பகர்வுகளை மீளப் பெறுவதற்கு அனுமதிக்கின்றது என்பதுடன் முழுமையான வெளிக்காட்டுகையை மேற்கொள்ளும் துணையாளிகளுக்கு எதிராகக் குற்றவழக்குத் தொடராதிருப்பதற்கும் அனுமதிக்கின்றது. நியதிச்சட்ட நிறுவனங்களின் பணியாட்டொகுதியினர், பாரிய தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுநர்கள், ஊடக நிறுவனங்களின் தனியுரிமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கும் வகையில் கட்டாய சொத்துப் பிரகடனக் கடப்பாடுகளைப் பரந்ததாக ஆக்குகின்றது. வெளிப்படுத்துநரின் அந்தரங்கத்தன்மை அத்துடன் அக்கறை முரண்பாடுகள் குறித்த விசாரணைகள் என்பவற்றை வலுப்படுத்துகின்றது. உயர் பெறுமதியுடைய தவறுகளுக்கான விதிவிலக்கான மேல் நீதிமன்ற வழக்குகளுக்குப் பிணையை மட்டுப்படுத்தி, தவறுகளைப் பிணையளிக்கக்கூடியவையாகவும் பிணையளிக்க முடியாதவையாகவும் ஆக்குகின்றது. ஊழலின் மூலம் பெற்ற ஆதனங்களின் மூன்று மடங்கு பெறுமதி என்னும் ஒரு கட்டாயத் தண்டத்தை அறிமுகம் செய்வதுடன், 2023 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சில ஆணைக்குழுப் பணியாட்டொகுதியினரின் ஊழியத்திற்கான நியதிகளையும் பாதுகாக்கின்றது.

# IV. தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள்

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

- நிதிச் செயற்பாட்டுச் செயலணியின் தராதங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட நிதிப் புலனாய்வு அலகின் மூன்றாவது தேசிய இடர் மதிப்பீட்டை (2024/25) அடிப்படையாகக்கொண்டு, பணம் தூய்தாக்கலைத் தடுத்தல், பயங்கரவாத நிதியளிப்பை எதிர்த்தல், மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் பரவலாக்கத்திற்கு நிதியளித்தல் என்பவற்றின் மீதான தேசியக் கொள்கை 2026 – 2030 இனை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (13 ஜூலை 2026)
- கூரை மீது பொருத்தப்படும் சூரிய சக்தித் தொகுதி மற்றும் மெய்நிகர் நிகர அளவீட்டுக் கருத்திட்டம் ஆகியவற்றிற்கான கடன் மற்றும் மானிய ஒப்பந்தங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது: சிறிய மற்றும் நடுத்தர மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், 35 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (ஆசிய அபிவிருத்தி வங்கியின் சலுகை வளங்கள்), 15.4 மில்லியன் யூரோ (ஐரோப்பிய ஒன்றிய மானியம்), மற்றும் 5.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் நிதி(கூட்டுக் கடன் பொறிமுறைக்கான ஜப்பானிய நிதி). (13 ஜூலை 2026)
- இரண்டு சட்டமூலங்களுக்குமான அரசியலமைப்புச் சவால்கள் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்களை நிவர்த்தி செய்யும் வகையில், நிதிக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் என்பவற்றிற்கான குழுநிலைத் திருத்தங்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டன; சட்டத்துறைத் தலைமையதிபதியினால் தடைநீக்கம் வழங்கப்பட்டுள்ளது. (6 ஜூலை 2026)
- 2026 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மற்றும் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளை ஒத்திசைவிற்காகப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது: கழிவு மற்றும் கழிவு உலோக உற்பத்திகளுக்கான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை 05 ஆம் இலக்க ஒழுங்குவிதி கட்டாயமாக்குகின்றது; முற்கொடுப்பனவு இறக்குமதிக் காலவரிசைகளை 6 ஆம் இலக்க ஒழுங்குவிதி திருத்துகின்றது. (6 ஜூலை 2026)

## டிஜிட்டல் பொருளாதாரம்

- ஒழுங்குறுத்தப்படாத கரைகடந்த crypto பயன்பாட்டிற்கான அணுகலிலிருந்து எழும் நிதிக் குற்றங்களுக்கான அபாயங்களை நிவர்த்தி செய்வதற்காக, மத்திய வங்கி, நிதிப் புலனாய்வு அலகு, மற்றும் உள்நாட்டு அரசிறைத் திணைக்களம் என்பவற்றின் ஒருங்கிணைப்புடன், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை ஒழுங்குறுத்துநராகக் குறித்துரைத்து, மெய்நிகர் சொத்துச் சேவை வழங்குநர்களை ஒழுங்குறுத்துவதற்கான எதிர்காலச் சட்டவாக்கத்திற்கான சட்ட ஏற்பாடுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)
- 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 2, பிரிவு 3, பாகம் I (தனிப்பட்ட தரவைச் செயன்முறைப்படுத்தல்), மற்றும் பாகம் III (கட்டுப்பாட்டாளர்களும் செயன்முறைப்படுத்துநர்களும்) ஆகியவை நடைமுறைக்கு வரும் திகதியாக 2027 சனவரி 1 ஆம் திகதி குறித்து நியமிக்கப்பட்டது. (22 ஜூலை 2026, வர்த்தமானி அறிவித்தல்)

## போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி

- தற்போது இயங்கி வரும் மாக்கும்புர மற்றும் கடவத்தை போக்குவரத்து நிலையங்கள் அத்துடன் அனுராதபுரம் (தெற்கு) மற்றும் கண்டியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் போக்குவரத்து நிலையங்கள் ஆகியவை உள்ளடங்கலாக பல்மாதிரிப் போக்குவரத்து நிலையங்களை முகாமை செய்வதற்கு முழுமையாகத் திறைசேரிக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)
- 2026 ஆம் ஆண்டிற்கான அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ரூ. 14,400 மில்லியன் தொகையினுள், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நகரங்களுக்கு இடையேயான மற்றும் தூர சேவைகளுக்காக, குளிரூட்டப்பட்ட Deluxe வகை நகரங்களுக்கிடையேயான சேவைப் பேருந்துகள் 600 இனைக் கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)
- தற்போது மாகாண சபை அல்லது உள்ளூராட்சிகளுக்குச் சொந்தமாகவுள்ள, அவசர கவனம் தேவைப்படும் 60 வீதிகளின் புனரமைப்பிற்கான விதப்புரைகளை வழங்கும் பொருட்டு, நிதி, போக்குவரத்து, மற்றும் பொது நிர்வாக அமைச்சுகள், நிதி ஆணைக்குழு, அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கிய பல் நிறுவனக் குழுவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)
- மிகையான போட்டி, நேர அட்டவணையை மோசமாகப் பின்பற்றல், பாதுகாப்பற்ற இயக்கம், மற்றும் போக்குவரத்து நெருக்கடி என்பவற்றை நிவர்த்தி செய்வதற்காக, 170, 177, மற்றும் 190 ஆகிய பயண வழித்தடங்களில் கூட்டு முகாமைத்துவத்தின் கீழ் பேருந்து சேவைகளைக் கொத்தணிமயமாக்கும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (6 ஜூலை 2026)
- அங்குலான சயுருபுர மற்றும் பொரளை சஹஸ்புர/சிங்கபுர I ஆம் கட்ட மற்றும் II ஆம் கட்ட நகர வீடமைப்புக் கட்டடத்தொகுதிகளுக்கான புனரமைப்புகளை மேற்கொள்வதற்கு, திறைசேரி நிதியளிப்பில் ரூ. 764.09 மில்லியன் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)

## துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து

- 36 பரிசோதனைக் கருமபீடங்கள் மற்றும் 6 வாயில்கள் ஆகியவற்றுடனான ஒரு புதிய கட்டடத்தை உள்ளடக்கும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் பயணிகள் தங்கியிருக்கும் இடத்தின் (Departure terminal) விரிவாக்க ஒப்பந்தம், M/s Maga Engineering (Pvt) Ltd இற்கு 7.26 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அத்துடன் ரூ. 3.77 பில்லியன் (சேர்பெறுமதி வரி விலகலாக) என்னும் தொகைக்கு வழங்கப்பட்டது. (13 ஜூலை 2026)
- இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்காக, ஐந்து வருடங்களுக்கு 17.16 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (வரிகள் விலகலாக) என்னும் தொகைக்கு M/S Sri Lanka Shipping Company Ltd இடமிருந்து இரண்டு 70 தொன் இழுவைப் படகுகளைக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. சர்வதேசரீதியில் போட்டிகர விலைமனுக் கோரல்களிலிருந்து குறைவான திருப்திகரமான விலைமனுதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)

## கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி

- பிராந்திய கைத்தொழில் சேவைக் குழு மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு என்பவற்றினால் விதப்புரை செய்யப்பட்டவாறாக, அண்ணளவாக ரூ. 2,805.26 மில்லியன் என எதிர்வுகூறப்படும் முதலீடு மற்றும் அண்ணளவாக 870 நேரடித் தொழில்வாய்ப்புகள் என்பவற்றுடன் புதிய கைத்தொழில்களைச் சேர்ந்த 23 முதலீட்டாளர்களுக்கு 13 பிராந்திய கைத்தொழில் பேட்டைகளில் 35 வருட காணிக் குத்தகைகளை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)
- 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ், மேற்குவியும் பணிகளை இல்லாதொழித்து, இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவாக ஒன்றிணைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)
- '‘ஸ்ரீலங்கா எக்ஸ்போ 2027’ சர்வதேச கண்காட்சிக்கான முகாமைத்துவ ஒப்பந்தம், LECS–ASTL பங்காண்மைக்கு, ரூ. 178.71 மில்லியன் தொகைக்கு (சேர்பெறுமதி வரி உள்ளடங்கலாக) வழங்கப்பட்டது. 2027 சனவரி 14 முதல் 17 வரை இக்கண்காட்சி நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (6 ஜூலை 2026)
- மாத்தறை மற்றும் காலியில் உள்ள சிறிய அளவிலான கறுவா உற்பத்தியாளர்களின் அதியுயர்ந்த பதப்படுத்தல் செலவுகள், துப்புரவேற்பாட்டுத் தராதரங்கள், மற்றும் உயிரிப்பொருள் கழிவுப் பிரச்சினைகள் என்பவற்றை நிவர்த்தி செய்வதற்காக, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், மற்றும் ருஹுணுப் பல்கலைக்கழகம் (மாபலான விவசாய பீடம்) என்பவற்றுடனான கூட்டுக் கருத்திட்டம் ஒன்றாக மையப்படுத்தப்பட்ட கழிவுகள் அற்ற உயிரிப்பொருள் கறுவா பதப்படுத்தல் நிலையத்தை அமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (13 ஜூலை 2026)

## கல்வி, உயர்கல்வி, மற்றும் தொழிற்கல்வி

- ரூபாவின் மதிப்பிழப்பைத் தொடர்ந்து ஆரம்ப ஒதுக்கீடு போதாத காரணத்தினால், உயர்மட்டத்தில் சித்தியடைந்த உயர்தர (2024) மாணவர்களுக்கான தற்போதுள்ள வருடாந்த வெளிநாட்டுப் புலமைப்பரிசில் மானியமான ரூ. 20 மில்லியனுக்கு மேலதிகமாக, வருடாந்தம் ரூ. 2.5 மில்லியன் வரையான நாணயமாற்ற வீத சீராக்கக் கொடுப்பனவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது; 30 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், 9 பேர் ஏற்கனவே வெளிநாடு சென்றுள்ளனர். (27 ஜூலை 2026)
- தேசிய வியாபார முகாமைத்துவக் கல்லூரி 2013 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டபோது அதற்குக் கைமாற்றப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் பட்டமளிக்கும் அந்தஸ்தை மீட்டெடுப்பதற்காக 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனச் சட்டத்தைத் திருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)

## சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகம்

- களுத்துறை, கண்டி, நுவரேலியா, மாத்தளை, காலி, கொழும்பு, மற்றும் கம்பஹா மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில், எஞ்சியுள்ள மானியத் தொகையான 50,320 ஐக்கிய அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தி, உயர் இரத்த அழுத்த மற்றும் நீரிழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் 2027, டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீட்டிப்புச் செய்யப்பட்டது. (20 ஜூலை 2026)
- விசாரணைக் குழு ஒன்றின் விதப்புரைகளைத் தொடர்ந்து, நுவரேலியா ஆதார வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் கண் அறுவைச் சிகிச்சைகளின் பின்னர் கண்பார்வையை இழந்த மேலும் நான்கு நோயாளிகளுக்கான தலா ரூ. 1 மில்லியன் இழப்பீட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. அந்த வைத்தியசாலையில் பாதிக்கப்பட்ட 17 நோயாளிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட இழப்பீட்டை ஒத்ததாக இது அமைந்துள்ளது. (6 ஜூலை 2026)

## விவசாயம், கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசனம்

- தனியார் துறையின் தலைமையிலான அபிவிருத்தி, சந்தை சார்ந்த அபிவிருத்தி, நிலைபெறுதன்மை, சிறு விவசாயிகளுக்கான ஆதரவு, அத்துடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான அபிவிருத்தி என்பவற்றை உள்ளடக்கிய, இற்றைப்படுத்தப்பட்ட தேசிய கால்நடை கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (13 ஜூலை 2026)
- பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், பூட்டான், நேபாளம், இலங்கை, மற்றும் தாய்லாந்து ஆகியவற்றை இணைக்கும் பிம்ஸ்டெக் அமைப்பின் 4 ஆவது விவசாய அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளின் கூட்டத்தை 2027, மார்ச் 17 முதல் 18 வரை இலங்கையில் நடத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (13 ஜூலை 2026)
- அளவைத் திணைக்களத்தின் காணித் தகவல் முறைமையுடனான ஒருங்கிணைப்பு உள்ளடங்கலாக, ‘பிம் சவிய’ தேசிய காணி உரித்துப் பதிவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தல் குறித்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக, 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தைத் திருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)

## சுற்றாடல்

- அண்ணளவாக 11 நாடுகளைச் சேர்ந்த 120 பிரதிநிதிகள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படும் பசுமைக் காலநிலை நிதியத்தின் கிழக்கு மற்றும் தெற்காசிய பிராந்தியக் கலந்துரையாடலை, 2026, செப்டெம்பர் 14 – 17 வரை நடத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. பசுமைக் காலநிலை நிதியத்தின் ஆசிய பசுபிக் குழு இதனை நடத்துவதற்காக இலங்கையைக் கோரியது (27 ஜூலை 2026)
- 2024 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின் பிரகாரம், அண்ணளவாக 7,450 காட்டு யானைகளை சம்பந்தப்படுத்தி, 25 மாவட்டங்களில் 19 மாவட்டங்களைப் பாதிக்கும் அதிகரித்துவரும் மோதலுக்கான பதிற்செயற்பாடாக, 2020 இன் திட்டத்தை இற்றைப்படுத்தி மனித-யானை மோதலை நிவர்த்தி செய்வதற்கான புதிய தேசிய செயற்றிட்டத்தின் வரைவைத் தயாரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (15 மே 2026)

## வலுசக்தி

- காலநிலையிலிருந்து மீளுந்தன்மையுடைய, வலுசக்தி வினைத்திறன் மிக்க கட்டடங்களுக்கான கொள்கை மற்றும் நிறுவனக் கொள்திறனைக் கட்டியெழுப்புவதற்கான முத்தரப்பு உடன்படிக்கை ஒன்றின் கீழ் GIZ இடமிருந்து (ஜேர்மனி) €924,063 (அண்ணளவாக ரூ. 314 மில்லியன்) மானியத்தைப் பெறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இது நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபையினால் கண்காணிக்கப்படும். (13 ஜூலை 2026)

## கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள்

- 315, 000 இற்கும் அதிகமான இலங்கை மீனவ சமுதாயத்தின் உறுப்பினர்களுக்கான சர்வதேசீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிலைமைகள், சுகாதாரம், மற்றும் மருத்துவப் பாதுகாப்புத் தராதரங்கள் என்பவற்றை கட்டம் கட்டமாக அறிமுகம் செய்வதற்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான சமவாயத்தை (C188) ஏற்று அங்கீகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)
- சட்டவிரோத, அறிக்கையிடப்படாத, மற்றும் ஒழுங்குறுத்தப்படாத மீன்பிடி, கடத்தல், மற்றும் இந்து சமுத்திர டுனா ஆணைக்குழுவின் இணக்கக் கடப்பாடுகள் என்பவற்றை நிவர்த்தி செய்வதற்காக, 2021 ஜனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட, அரசாங்க நிதியளிக்கப்பட்ட, அண்ணளவாக 1,500 பழைய பன்னாட் கலங்கள் மற்றும் ஒருநாள் கலங்களுக்கான கட்டாய கலக் கண்காணிப்பு முறைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (6 ஜூலை 2026)

## நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு

- அரசியலமைப்பின் 146 ஆம் உறுப்புரைக்கு அமைவாக, அதிகளவிலான பிராந்திய வழக்குகளுக்காக மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகளை அதிகரிப்பதற்கும், நீதிபதிகளின் நியதிச்சட்ட ஓய்வூதிய வயதை உயர்த்துவதற்கும் அரசியலமைப்பு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம் என்பவற்றிற்கான வரைவுத் திருத்தங்களைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது. (27 ஜூலை 2026)
- கைப்பற்றிய போதைப்பொருட்களை வழக்கு விசாரணை முடிவதற்கு முன்னர் அகற்றுவதை அனுமதித்தல் மற்றும் ஆழ்கடலில் இழைக்கப்படும் ஔடதங்கள் சம்பந்தமான தவறுகளை நிவர்த்தி செய்தல் என்பவற்றிற்காக அதன் ஏற்பாடுகளைத் திருத்தும், நஞ்சு வகைகள், அபின், மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச்சட்டத்திற்கான திருத்தச் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)
- (54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பழைய போகம்பரை மற்றும் மஹமோதர என்பவை, இலங்கை முழுவதிற்குமான நியாயாதிக்கத்தை உள்ளடக்கிய சிறைச்சாலைகளாகத் தாபிக்கப்பட்டன. (7–8 ஜூலை 2026, வர்த்தமானி அறிவித்தல்கள்)

## வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல்

- நீர் மற்றும் கழிவுநீர் துறையின் நவீனமயமாக்கத்திற்கு ஆதரவாக, தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் தொழில்நுட்ப அறிவு, ஆராய்ச்சிக் கொள்திறன், மற்றும் பணியாட்டொகுதி அபிவிருத்தி ஆகியவற்றை வலுப்படுத்துவதற்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கும் RMIT பல்கலைக்கழகத்திற்கும் (அவுஸ்திரேலியா) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கியது. (20 ஜூலை 2026)
- ரூ. 2,000 மில்லியன் என்னும் மதிப்பீட்டுச் செலவொன்றில் (ரூ. 800 மில்லியன் JICA கடன், (ரூ. 1,200 மில்லியன் உள்நாட்டு நிதிகள்), பேராதனைப் பல்கலைக்கழகத்தை உள்ளடக்கும் வகையில் கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டதுடன் 2027 டிசம்பர் 31 வரையும் நீட்டிப்புச் செய்யப்பட்டுமுள்ளது.. (6 ஜூலை 2026)

## கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல்

- சமூக சேவைகள் திணைக்களம், முதியோருக்கான தேசிய செயலகம், மற்றும் இயலாமையுடைய ஆட்களுக்கான தேசிய செயலகம் ஆகிய மூன்று நிறுவனங்களினதும் பணிகளை ஏற்கனவே மேற்கொண்டுவரும் பகிரப்படும் கள நிலை அலுவலர்களைப் பிரதிபலிக்கும் வகையில், ஒருமித்த நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றின் கீழ் இம்மூன்று நிறுவனங்களினதும் நிர்வாக இணைப்பிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)
- தற்போதுள்ள மீன்பிடி மற்றும் விவசாய விலக்களிப்புகளுக்கு அப்பால், சபையினால் நிர்வகிக்கப்படும் ஓய்வூதியத் திட்டங்களுக்குத் தகுதிபெறும் இலக்குக் குழுக்களை விரிவாக்கம் செய்வதற்காக 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)

## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள்

- அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனைப் பிரச்சினைக்கான பதிற்செயற்பாடாக, சபையின் வகிபங்கு மற்றும் தத்துவங்களை விரிவாக்கும் பொருட்டு 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தில் கொள்கைத் திருத்தம் மற்றும் மீள் வரைவு என்பவற்றை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)
- முதற்றடவைப் போதைப்பொருள் பாவனையாளர்களை உள்ளடக்கும் முறைசார் சிகிச்சை மற்றும் புனரமைப்புப் பொறிமுறைகளை வலுப்படுத்தும் பொருட்டு 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தில் கொள்கைத் திருத்தம் மற்றும் மீள் வரைவு என்பவற்றை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)

## வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை

- புலம்பெயர் தொழிலாளர்களின் நலனோம்புகைக்கான சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பை நவீனமயப்படுத்துவதற்காகவும் சர்வதேச தராதரங்களுடன் நேரொத்ததாக அமைவதற்கும், 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகச் சட்டத்தை நீக்கிப் புதிய சட்டம் ஒன்றின் வரைவைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது (20 ஜூலை 2026)
- தற்போது பயன்படுத்தப்படாத வசதிகளிலிருந்து பொருளாதாரப் பெறுமதியை உருவாக்கம் செய்வதற்காக, பெந்தோட்டை, கதிர்காமம், மகியங்கனை, எம்பிலிப்பிட்டிய, மற்றும் அனுராதபுரத்தில் உள்ள சனாதிபதி மாளிகைகளை, பிரேரிப்புகளைக் கோருவதன் ஊடாக சுற்றுலாத்துறைக் கருத்திட்டங்களுக்காக முதலீட்டாளர்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (27 ஜூலை 2026)
- புலமைச் சொத்துகள் ஊடாகப் பண்டிகைச் சுற்றுலாவை ஊக்குவித்தல் மீதான உலகப் புலமைச்சொத்துகள் அமைப்பின் (WIPO) கருத்திட்டம் ஒன்றுடன் தொடர்புபட்டதாக, பாரம்பரியக் கலைகள், அறிவு, பதிப்பு உரிமைகள், வர்த்தகக் குறியீடுகள் மற்றும் வர்த்தக

நாமங்கள் என்பவற்றை உள்ளடக்கி கண்டி எசல பெரஹரவிற்கான புலமைச் சொத்துகள் பாதுகாப்பை விருத்தி செய்வதற்காக கூட்டுக் குழு ஒன்றைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

- ஏனைய தொழில்சார் அமைப்புகளுக்கு இணையான முறைசார் பட்டயம் பெற்ற அந்தஸ்தை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்வல்லுநர்களுக்கும் வழங்குவதை இலக்காகக் கொண்டு, தற்போதுள்ள 1976 ஆம் ஆண்டின் நிறுவகத்தின் மீது கட்டியெழுப்பப்படும் இலங்கை பட்டயம் பெற்ற கணனி நிறுவனத்தை, சட்ட வரைஞரால் தயாரிக்கப்படவுள்ள புதிய சட்டமூலம் ஒன்றின் ஊடாகத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (20 ஜூலை 2026)

---

*பொறுப்புத்துறப்பு – சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையினால் வேண்டப்பட்டவாறாக Chambers of Ermiza Tegal இனால் தயாரிக்கப்பட்டது. இது ஒரு சுருக்க விளக்கம் மாத்திரமேயாகும்; எவ்வித சட்டப் பகுப்பாய்வையும் இது கொண்டிருக்கவில்லை என்பதுடன் சட்ட ஆலோசனையாக இதன் மீது தங்கியிருத்தலுமாகாது. ஏதேனும் திருத்தங்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு tegal.lawchambers@gmail.com இனைத் தொடர்பு கொள்ளவும்*